பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 28 வியாழக்கிழமை 14.09.2023 அதிர்வு 45

## குருந்தூர்மலை விவகாரம்: வினோ, கஜனுக்குப் பிணை

குருந்தூர்மலை விகாரையின் விகாராதிபதி தொடர்ந்த வழக்கில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், அகில இலங்கை 04

# தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும்! போர்க்குற்றவாளிகள் எவரையும் தப்ப விடாதீர்கள்!!

### ஜெனிவாவில் பேர்ள் அமைப்பு வலியுறுத்து



இலங்கையின் குற்றவாளிகளைப் பொறுப்புக்கூற செய்வதற்கு சர்வதேசமயமாக்கப்பட்ட பொறிமுறைகளை சர்வதேச சமூகம் பயன்படுத்த வேண்டும் என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்துக்கான மக்கள் அமைப்பான பேர்ள் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவையின் 54ஆவது அமர்வின் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை குறித்த கலந்துரையாடல்களின்போது பேர்ள் அமைப்பு 04

# சர்வதேச விசாரணைக்கூண்டில் கோட்டாவை நிறுத்த வேண்டும்!

### அவரின் குடும்பத்தினரையும் கூட விட்டுவைக்கக்கூடாது

### என்று செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு



- கே.வசந்தரூபன் -

"கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் போதும், அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் போதும் பல கொடுமைகளை எங்கள் தமிழ் மக்களுக்கு இழைத்திருக்கின்றார். பல இன்னல்களையும், மனித உரிமை மீறல்களையும் அவர் செய்துள்ளார். அவரும், அவரின் குடும்பத்தினரும் மற்றும் அதில் சம்பந்தப்பட்ட அத்தனை பேரும் சர்வதேச விசாரணையில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்." 04

## இந்திய மீனவர்கள் 19 பேர் நெடுந்தீவுக் கடலில் கைது

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த 19 பேரும் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். 04

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்

(எஸ்.நிதர்ஷன்)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம், வடமராட்சி, வல்லிபுர ஆழ்வார் கோயில்வருடாந்த மகோற்சவம் இன்று 04

## ஹரக்கட்டாவின் பாதுகாப்பு பலப்படுத்தல் 10 பேர் கொண்ட எஸ்.ரி.எவ். குழு களத்தில்



குற்றத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகப் புள்ளியும் போதைப்பொருள் கடத்தல் காரருமான ஹரக்கட்டா, அதிரடிப் படையின் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் கைத்துப்பாக்கியை அபகரித்துத்தப்பிச் செல்ல முயற்சித்த சம்பவத்தையடுத்து அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. 04

## எங்கள் கிராமத்துக்கு மதுக் கடை வேண்டாம்

### உடுப்பிட்டியில் மக்கள் போராட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – உடுப்பிட்டி சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபான சாலையை அகற்றுமாறு உடுப்பிட்டி சந்தியில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 04

# பிரிவினைவாதம் ஒன்றே இந்த நாட்டை அழிக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



நமது நாட்டில் பல்வேறு இனங்களை பிரதிநிதித்து வப்படுத்தும் மதங்களை பின்பற்றும் பலர் உள்ளனர். எனவே நாம் ஒரு நாடாக ஒன்றிணைந்து செயற் பட வேண்டும். பிரிவினைவாதம் ஒன்றே இந்த நாட்டை அழிக் கும். எந்த ஒரு இனத்தையோ, மதத்தையோ சேர்ந்த யாரும் தீவிரவாதத்தை ஏற்கக் கூடாது. அனைத்து இனங்க ளையும் மதங்க ளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விசு வாசிகள் எந்த பேதமும் இன்றி ஒரே தாயின் பிள்ளைகள் போல் ஒற்று மையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

காலி ஸாஹிரா கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள் ளவை வருமாறு–

தீவிரவாதத்துக்குப் போலவே எந்தப் பயங்கரவாதத்துக்கும் எமது நாட்டில் இடமில்லை. எனவே அனைத்து இனங் களும் மதங்களும் ஒன்றிணைந்து அனைத்து இனங்களிலும் மதங்களி லும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் தீவிரவாதத்தை தோற்கடிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் தீவிரவாதத்தை அரசியல் நோக்கத்துக்காகச் சில கட்சிகள் பயன்படுத்தின.

ஜனாதிபதி கதிரைக்கு செல்லும் ஆசையில் முழு நாட்டையும் துண்டு துண்டாக உடைத்து தேசிய ஒற்றுமை யையும் ஒருமைப்பாட்டையும் அவர்கள் அழித்தார்கள் .

ஜனாதிபதி கனவுக்காக, யுத்த வெற் றியின் பின்னர் அனைத்து இனங்களும் சமூகங்களும் ஒன்றிணைந்து ஒரு நாடாக அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக இனவாதத்தைக் கிளறிவிட்டன.

மலட்டு கொத்து மற்றும் மலட்டு அறுவை சிகிச்சைகள் செய்ததாகக் கூறி வைத்தியர் சாபி இடைநீக்கம் செய்யப்பட்டார். கொவிட் காலத்தில் தகனமா அடக்கமா என்ற பிரச்சினை வந்த போது உலக சுகாதார ஸ்தாபனத் தின் வழிகாட்டுதல்களைக் கூட மறந்து விட்டு செயற்பட்டனர். இதன்போது, வீதிகளில் இறங்கி குரல் எழுப்பியது ஐக்கிய மக்கள் சக்தியே.

இன, மத முரண்பாடுகளை உரு வாக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது . ஐக்கிய மக்கள் ஆட்சியில் அரசின் கீழ் எந்த இனமும் மற் றொரு இனத்துக்கும் எந்த மதமும் மற்றொரு மதத்துக்கும் பிரிவினையை உண்டாக் கும் விதமாக செயற்பட்டாலோ அல்லது அவ்வாறு கருதப்பட்டாலோ அது குற்றச் செயலாகக் கருதப் படும்.– என்றார்.

# தலை மன்னாரில் தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்களைக் காணவில்லை!

(மன்னார் நிருபர்)





தலை மன்னாரிலிருந்து மீன்பிடியில் ஈடுபடுவதற்காக படகு ஒன்றில் சென்ற இரு மீனவர்கள் கரை திரும்பவில்லை. இந்த நிலையில் ஏனைய மீனவர்கள் காணாமல் போன மீனவர்களை தேடி வருகின்றனர்.

அந்த மீனவர்களைத் தேடிச் சென்ற படகுகளில் இரு படகுகள் கடல் கொந்தளிப்பு மற்றும் கடும் காற்றின் காரணமாக கச்சத்தீவில் தரித்து நிற் கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை (12) மாலை 7.30 மணியளவில் தலைமன்னார் கடற்கரையில் இருந்து வட கடலில் இரு மீனவர்கள் ஒரு படகில் வலிச்சல் மூலம் மீன் பிடிக்க சென்றுள்ளனர்.

ஆனால் அவர்கள் வழமையாக கரை திரும்பும் நேரத்தில் கரை திரும்பாததால் இந்தப் பகுதி மீனவர்கள் அச்ச் கொண்டுள்ளனர்.

கடலில் இவர்களைத் தேடுவதில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இதுவரை அவர்கள் கண்டுபிடிக் கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

காணாமல் போன இரு மீனவர்களும் தலைமன்னாரைச் சேர்ந்தவர்கள்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜே.நிக்சன் டிலக்ஸ் கூஞ்ஞ மற்றும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரி. சுமித்திரன் ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

# தனியார் கல்வி நிலையங்களை பதிவு செய்யாவிட்டால் நடவடிக்கை

## கல்முனை மாநகர சபை அறிவிப்பு

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வரும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும். இல்லையேல் சம்மந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள விஷேட அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கிவரும் பல தனியார் கல்வி நிலையங்கள் மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் இன்னும் பல தனியார் கல்வி நிலையங்கள் தம்மை பதிவு செய்யாது இயங்கி வருகின்றன.

இவ்வாறான நிறுவனங்கள் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளாமல் இயங்குவது சட்டவிரோத செயற்பாடு.



போதைப் பொருள் பாவனையில் இருந்தும் கலாசார சீர்கேடுகளில் இருந்தும் மாணவர்களைப் பாதுகாத்து, நெறிப்படுத்தும் பொருட்டும் ஜம்மியத்துல் உலமா சபை உள்ளிட்ட பொது அமைப்புகளின் வேண்டுகோளின் பேரில் பொருத்தமற்ற நேரங்களில் தனியார் வகுப்புகள் நடத்தப்படுவதை கட்டுப்படுத்தும் பொருட்டும் தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் எமது மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்களால் இந்நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஆகையால், அனைத்துத் தனியார் கல்வி நிலையங்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து, அவற்றைக் கட்டுக் கோப்புடன் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே, இதுவரை பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் .

குறித்த காலப் பகுதியினுள் பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் நடத்துனர்கள் மீது மாநகர சபைகள் கட்டளை சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவற்றை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் வீடுகளில் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களால் நடத்தப்படும் ஆரம்பக் கல்வி மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளுக்கும் இவ்வறிவுறுத்தல் பொருத்தமானது. அவர்களும் தம்மை ஒரு கல்வி நிலையமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.– என்றுள்ளது.







# முகாமைத்துவ சேவை வலுவூட்டல் செயலமர்வு

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக் குட்பட்ட சுகாதார நிறுவனங்களில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான தாபன விதிக்கோவை தொடர்பான வலுவூட்டல் செயலமர்வு இன்று (14) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் கீழ் இடம் பெற்ற இந்த நிகழ்வு பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ்.வீ.வாஜிதா தலைமையில் இடம்பெற்றது .



இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ராமகுட்டி, நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எம்.எஸ். வீ.வாஜிதா ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற குறித்த உத்தியோகத்தர்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய நிர்வாக நடைமுறைகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள், சுகாதாரத்துறைக்கு ஆற்றவேண்டிய பணிகள் தொடர்பாகவும் வளவாளர்களால் இந்த நிகழ்வின் போது விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

# தலைமன்னார் மீனவர்கள் இருவரும் கண்டுபிடிப்பு?

இந்தியா, தமிழகத்தின் கோடிக் கரையிலிருந்து 7 கடல் மைல் தொலைவில் ஓர் இலங்கை விசைப்படகு இருவருடன் தத்தளிப்பதாக இன்று மதியம் கிடைத்த தகவலையடுத்து இந்திய கடற்படை அந்தத் திசையை நோக்கி விரைந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் தலை மன்னார் கடற்கரையிலிருந்து மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன இரு மீனவர்களாக இவர்கள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி இரண்டாம் பக்கத்தில்)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### சர்வதேச விசாரணை...

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில்ஊடகவியலாளர்எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“மனித உரிமை மீறல் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை எனத் தென்னிலங்கைத் தலைவர்கள் கோரும் நிலையில், குறிப்பாக ஒரு விடயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு அதில் முன்னாள் பெண் போராளிகளின் எச்சங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. இதற்கும் சர்வதேச விசாரணை வேண்டும் எனத் தென்னிலங்கைத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும். இந்த விடயத்தில் அவர்கள் மௌனம் சாதிக்க முடியாது.

மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கிடப்பிலே உள்ளன. இப்படி ஒவ்வொரு இடத்திலும் மனித எச்சங்களைக் கண்டுபிடித்து கிடப்பில் போடும் நிலைதான் காணப்படுகின்றது. ஆகவே, இந்த விடயத்தில் சர்வதேசம் சரியான கவனத்தைச் செலுத்த வேண்டும்.

வடக்கில் புத்த கோயில்கள் அமைப்பதற்கும், பௌத்த விகாரைகளை நிறுவுவதற்கும் இராணுவம் பல இடங்களைப் பிடிப்பதற்குக் காரணங்கள் எல்லாம் அவர்கள் பிடிக்கின்ற இடங்களைத் தோண்டுகின்ற போது எங்களது மக்களின் மனித எச்சங்கள் உள்ளன. அந்த விடயத்தை மறைப்பதற்காகவே சட்டவிரோத நில அபகரிப்பு துரிதமாக நடைபெறுகின்றது என நான் சந்தேகப்படுகின்றேன்.

ஆகவே, இந்த விடயத்தில் ஒட்டுமொத்த சிங்களத் தலைவர்களும் குரல் கொடுக்க வேண்டும். சர்வதேச விசாரணையைத் தமிழ் மக்கள் கோருகின்றார்கள். அந்த வகையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படும் வகையில் தென்னிலங்கையில் உள்ளவர்களும் மனச்சாட்சியின்படி நடக்க வேண்டும்.” – என்றார்.

### குருந்தூர்மலை...

தமிழ்க் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியது.

தமது வழிபாட்டு உரிமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக குறித்த விகாரையின் விகாராதிபதி கல்கமுவ சுமேத தேரர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.வினோநோகராதலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசாகஜேந்திரன்,முன்னாள்வடக்குமாகாண சபை உறுப்பினர்கள் க.சிவநேசன், து.ரவிகரன் உள்ளிட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அவர்களைநீதிமன்றத்தில்முன்னிலையாக அறிவித்தல் விடுக்கப்பட்டபோதும், கடந்த வழக்கு தவணையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.வினோநோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை. முன்னிலையானவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, அவர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இன்று வழக்கில் அவர்கள் முன்னிலையாகச் சென்றபோது, அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துகின்றனர் எனப் பொலிஸார் மன்றில் அறிக்கையிட்டனர்.

கடந்த வழக்கில் முன்னிலையாகும் அறிவித்தல் தமக்குக் கிடைத்திருக்கவில்லையென இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

அவர்களைப் பிணையில் விடுவித்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், வழக்கை 2024 ஜனவரி 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

### தமிழினப் படுகொலைக்கு...

தமிழ் மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றை நினைவுகூர்ந்துள்ளது.

நீதிக்கான முயற்சிகள் இலங்கை அரசினதும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளினதும் விருப்பத்திலேயே தங்கியுள்ளன என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கையின் தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் தங்கள் நடவடிக்கைகள் குறித்தும், பாதுகாப்புப் படையினர் குறித்தும் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க மறுத்துள்ளனர் – தவறியுள்ளனர் எனவும் பேர்ள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் ஆழமாக வேரூன்றிய சிங்கள – பௌத்த பெரும்பான்மைவாதம் இலங்கையின் அரசியல் நிலப்பரப்பின் பின்னணியில் முக்கிய உந்துசக்தியாகச் செயற்படுகின்றது, இலங்கையில் உறுதியற்ற தன்மையையும் தண்டனையின்மையையும் தொடர்ந்தும் உருவாக்கி வருகின்றது, தமிழர்களைத் தொடர்ந்தும் ஒடுக்கி வருகின்றது எனவும் பேர்ள் தெரிவித்துள்ளது.

இது காணி அபகரிப்பு துரிதமாக இடம்பெறுவதற்கும் வடக்கு – கிழக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ள பேர்ள், சமீபத்தில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை நீதியும் பொறுப்புக்கூறலும் சாத்தியமாகும் வரை கடந்தகாலங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்தும் மன உளைச்சலை கொடுக்கும் என்பதை நினைவூட்டுகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் சமீபத்தைய அறிக்கை அதன் முடிவுகள், பரிந்துரைகளை முற்றாக நிராகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ள பேர்ள் அமைப்பு, இலங்கையின் குற்றவாளிகளைப்பொறுப்புக்கூறசெய்வதற்குசர்வதேசமயமாக்கப்பட்ட பொறிமுறைகளைப் பயன்படுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் தொடர்ந்தும் அழைப்பு விடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நீதியும் பொறுப்புக்கூறலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் இல்லாத பட்சத்தில் சிங்கள பெரும்பான்மையின வாதம் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்படாததாகக் காணப்படும், இன மோதலுக்கான அடிப்படை காரணங்களுக்குத் தீர்வு காணப்படாத நிலை நீடிக்கும் ஸ்திரதன்மையற்ற சூழல் காணப்படும் எனவும், மேலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் இலங்கையில் நெருக்கடிகள் தொடரும் எனவும் பேர்ள் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

### வல்லிபுர ஆழ்வாருக்கு...

கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 8. 45 மணியளவில் கொடியேற்றம் இடம்பெற்றது.

தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெண்ணைத் திருவிழாவும், 23ஆம் திகதி துகில் திருவிழாவும், 24ஆம் திகதி பாம்புத் திருவிழாவும், 25ஆம் திகதி கம்சன் போர்த் திருவிழாவும் , 26 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 27ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 29ஆம் திகதி சமுத்திரத் தீர்த்த திருவிழாவும், 30ஆம் திகதி கேணித்தீர்த்தமும் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது.

### ஹரக்கட்டாவின்...

பாதுகாப்புக்காக விசேட அதிரடிப் படையின் 10 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 10ஆம் திகதி மாலை விசேட அதிரடிப் படையின் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரிடமிருந்த கைத்துப்பாக்கியை ஹரக்கட்டா பறிக்க முற்பட்ட சம்பவத்தை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

### எங்கள் கிராமத்துக்கு...

மதுபானசாலைஅமைந்துள்ளபகுதியில் பாடசாலைகள், ஆலயம் என்பன இருப்பதனால் இந்த மதுபானசாலை அகற்றப்பட வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு சில தினங்களுக்குள் மதுபான சாலை அகற்றப்படாவிட்டால் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

போராட்டம் தொடர்பான மகஜர் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட செயலர் உள்ளிட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### இந்திய மீனவர்கள்...

இதன்போது 3 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இன்று நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ள அந்த மீனவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.



# நல்லூர் தெய்வீகத் திருக்கூட்டம்

## 23 ஆம் நாள் நிகழ்வுகள்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடாத்தும் தெய் வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் 23ஆம் நாள் நிகழ்வு நேற்று(13) திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே இடம் பெற்றது.

சங்கான பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நிகழ்வுகளை வழங்கியிருந்தனர்.

நயினை சிவமைந்தன் குழுவினர் வழங்கிய ஈழத்துச் சித்தர் தவத்திரு செல்லப்பா சுவாமிகளின் இசை அரங்கு சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாதுகாப்பு அமைச்சும் நாய் வாலும்

'சனல்-4' தனது பிந்திய காணொலி மூலம் வெளிப்படுத்திய விடயங்களை ஒட்டி இலங்கை அரசும் அதன் பாதுகாப்பு அமைச்சும் காட்டிய எதிரும் புதிருமான பிரதிபலிப்புகள் குறித்துத் தென்னிலங்கை ஊடகங்களே காட்டமாக விமர்சித்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

ஏற்கனவே இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் கீழான புலனாய்வு அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகி இருக்கும் நிலையில், இந்த விடயத்தை ஒட்டி அரசின் - குறிப்பாக அரசுத் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் - அறிவிப்புக்கள் முரணகையாகத் தோன்றுகின்றன என்று தெற்கு ஊடகங்கள் குறை கூறியுள்ளன.

பொறுப்புக் கூறல் மற்றும் நம்பகத்தன்மை விவகாரத்தில் பாதுகாப்பு அமைச்சும் அதன் புலனாய்வு அமைப்புகளும் மிக மோசமான விமர்சன நிலையில் உள்ளன. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட புலனாய்வு விசாரணைகளில் அதிர்ச்சி தரும் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்த வண்ணம் உள்ளன. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பல மோசமான சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருக்கின்றமை பற்றிய தகவல்கள் கசிந்துள்ளன. ஊடகவியலாளர்களான லஸந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கும், கீத் நொயர், உபாலி தென்னக்கோன், நாமல் பெரேரா ஆகியோர் மீதான தாக்குதலுக்கும் இராணுவப் புலனாய்வுத் துறையுடன் தொடர்புபட்ட 'திரிபோலி பிளட்டூன்' என்ற அணி மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டமைக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இன்னொரு குழு மீது குற்றம் சுமத்தப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை, தமிழ் சிவிலியன்கள் 11 பேர் கடத்தப்பட்டு, பணத்துக்காகப் பணயம் வைக்கப்பட்டு, கொல்லப்பட்டமை தொடர்பில் கடற்படை புலனாய்வுப் பிரிவு மீது குற்றச்சாட்டு உள்ளது.

இந்த விடயங்களை விசாரித்த பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனிவிரட்ன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரா, இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வா ஆகியோர்அச்சுறுத்தப்பட்டுதொல்லைப்படுத்தப்பட்டனர். இதில் ஷானி அபேசேகரா 11 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். நிஷாந்த சில்வா வெளிநாட்டுக்குத் தப்பியோடி அரசியல் தஞ்சம் புக வேண்டியவரானார்.

இப்படிச் சுட்டிக்காட்டும் தெற்கு ஊடகம் ஒன்று, 'சனல்-4' காணொலி வெளியாகி 48 மணி நேரத்தில் அதில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை அடியோடு மறுப்பதாகவும், 36 ஆண்டுகள் நாட்டுக்குப் பணியாற்றிய சிரேஷ்ட இராணுவ அதிகாரிக்கு (சுரேஷ் சலேக்கு) எதிரான குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரிப்பதாகவும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கின்றது.

ஆனால், அந்தப் பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரான ஜனாதிபதி இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்படும் என அறிவிக்கின்றார். அவரது அரசு 'சனல்-4' காணொலியின் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய நாடாளுமன்ற தெரிவுக் குழு நியமிக்கப்படும் என்கின்றது.

ஜனாதிபதி வைத்திருக்கும் அமைச்சு - அதுவும் பாதுகாப்பு அமைச்சு - இந்தக் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுப்பதாக அறிவிக்க, மறுபுறம் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஆணைக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்று அரசு தரப்பில் அறிவிக்கப்படுவது இரட்டை வேடம் இல்லையா என்று கேட்கும் அந்தத் தெற்கு ஊடகம், அரசாங்கத்துக்கு விசுவாசமாக எந்நேரமும் வால் ஆட்டும் நாய் போல அல்லாமல் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பாகச் செயல்பட வேண்டும் எனக் கூறுகின்றது. சரியான கருத்தியல்தான் அது.





# அனுமதியின்றி மூடப்படும் விவசாய, நீரேந்து பகுதிகள்

## ஆராய்ந்து அறிக்கையிட நடவடிக்கை

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட விவசாய மற்றும் நீரேந்து பிரதேசங்கள் முறையான அனுமதியின்றியும் மற்றும் திட்டமிடப்படாத வகையிலும் மண்ணிட்டு நிரப்படுவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் முகமாக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நீர்ப்பாசன அமைச்சின் மேலதிக செயளாளர் திருமதி சன்டியா எதுகல தலைமையிலான உத்தியோகத்தர்கள் அடங்கிய குழு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

அன்றைய தினம் பிரதேச செயலாளர் ரீ.எம். முகமட் அன்சார் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலும், களப் பரிசோதனைகளிலும் அதிகாரிகள் பங்கு பற்றினர்.



# தமிழ், சிங்கள விவசாயிகள் பூசை வழிபாடுகளில்

(ஹஸ்பர்)

திருகோணமலை , பன்குளம் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பன்குளம் பிள்ளையார் ஆலயத்தில் இந்த முறை சிறுபோக விவசாய நடவடிக்கைகள் சிறப்பாக முடிவுற்றமைக்கு நன்றி தெரிவித்து பூசைவழிபாடுகளையும், பொங்கல் நிகழ்வுகளையும் நேற்று (13) சிறப்பாக நடத்தினர்.

இந்த நிகழ்வில் தமிழர்களோடு சிங்கள விவசாயிகளும் பெரும் எண்ணிக்கையில் ஒற்றுமையாக கலந்துகொண்டமை ஒரு சிறப்பம்சம் ஆகும்.

# ஆங்கில தினப் போட்டியில் சாதனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் தரம் 03 இல் கல்வி பயிலும் மாணவி எம்.ஐ.ஐ. அதாபா மனாரி ஆங்கில தின போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று, மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தெரிவித்தார்.

இவ் வெற்றிச் சாதனையை நிலைநாட்டிய இம்மாணவியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

இதன் போது இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்து பயிற்றுவித்து வழிநடாத்திய ஆசிரியைகளான திருமதி ஏ.ஆர். அஸ்மினா, திருமதி எல். பாறூக், திருமதி எம்.ஐ. சுலைனா உட்பட பெற்றோருக்கும் அதிபர் நன்றி தெவித்தார்.

இந்தப் போட்டியின் முதலாமிடத்தை அக்கரைப்பற்று வலயம் பெற்றுள்ளது.








# கல்முனை மாநகர பாடசாலைகளில் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைகள்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகராட்சி எல்லையினுள் அமைந்துள்ள அரச பாடசாலைகளில் திண்மக் கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டம் நேற்றுப் புதன்கிழமை (13) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. எச்.ஜௌஸி, திண்மக் கழிவகற்றல் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பாடசாலைகளின் அதிபர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பாடசாலைகளில் திண்மக் கழிவகற்றலை மேற்கொள்ளும் போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகளை அதிபர்களிடம் கேட்டறிந்து கொண்ட மாநகர ஆணையாளர், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்தினார்.

திண்மக்கழிவகற்றல் சேவையின்போது மாநகர சபையால் வகுக்கப்படும் பொறிமுறைகளுக்கேற்ப திண்மக் கழிவகற்றல் வாகனங்களில் குப்பைகள் ஒப்படைக்கப்படுமாயின் பாடசாலைகளில் இருந்து அவற்றை இலகுவாக அகற்றிக் கொள்ள முடியும் எனவும் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

உக்கும் கழிவுகள் மற்றும் உக்காத கழிவுகள் என்று




குப்பைகளை வகைப்படுத்தி வெவ்வேறு பைகளில் சேகரித்து வைக்க வேண்டும் எனவும் அவற்றை பாடசாலைகளின் நுழைவாயில்களில் வைத்து தாமதமின்றி உரிய நேரத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி கேட்டுக்கொண்டார்.

இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குக் குப்பைகளை வகைப்படுத்திச் சேகரிப்பதற்கான பைகள் அனைத்து பாடசாலைகளுக்கும் மாநகர சபையால் இதன்போது இலவசமாக வழங்கப்பட்டன.

# சமூக விஞ்ஞான போட்டி வெற்றியாளர்





(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் சம்மாந்துறை கல்வி வலயத்தில் இருந்து மூன்று மாணவர்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவா கியுள்ளனர்.

இதன்படி இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியின் ஏழாம் தரத்தில் கல்வி பயிலும் எம்.கே.யூசுப் ஷயான் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார் என்று அதிபர் எம். ஐ. மாஹிர் தெரி வித்தார்.







# சாதனையாளர் கௌரவிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம் )**

வவுனியா, சின்னச்சிப்பிக்குளம் தாருல் உலூம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த சாதனையாளர் கௌரவிப்பு விழா கல்லூரி முதல்வர் அனீஸ் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்டச் செயலாளர் சரத் சந்திர, வலயக் கல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன் மற்றும் சின்னச்சிப்பிக்குளம் ஜும்ஆ மஸ்ஜித் தலைவர் இம்தியாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# உயர்தரப் பெறுபேற்றில் வரலாற்றுச் சாதனை

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை உயர்தரப் பெறுபேற்றில் சாதனை படைத்துள்ளது.

இம்முறை அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையில் இருந்து 80 மாணவர்கள் சகல துறைகளிலும் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பொறியியல் துறைக்கு 4 பேர் 3ஏ பெற்றுள்ள நிலையில் 9 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வை.எம். ஹிஷாம் எனும் மாணவன் மாவட்டத்தில் முதல் நிலை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மருத்துவ துறைக்கு 3 மாணவர்களும் முகாமைத்துவம் மற்றும் வர்த்தகவியல் துறைக்கு 11 மாணவர்களும் தொழில்நுட்ப துறையில் 9 மாணவர்களும் கலைத்துறையில் 15 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். விஞ்ஞான, கணித சார்ந்த பல்வேறு துறைகளில் 50 பேரும் இம்முறை பல்கலைக்கழகம் செல்லவுள்ளனர்.



# ஊடகவியலாளர் கௌரவிப்பு

**(அ.அஸ்வர் )**

கொழும்பு க்ரெட் மயின்ட்ஸ் உளவளக் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட உளவளக் கல்வி கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள், பெற்றோர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் கவிஞருமான இக்பால் அலி, விருந்தினர்களால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கொழும்பு -7 இல் அமைந்துள்ள மேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிறுவனத்தின் பணிப்பாளர் பஸ்லான் ஏ காதர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். எச். எ. சிப்லி கலந்து கொண்டார்.

இந்த நிறுவனத்தால் வெளியிடப்பட்ட "என்னை வாசித்த புத்தகம் பாகம் 11" எனும் நூல் கவிஞர் இக்பால் அலியால் உத்தியோக பூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பெருந்தொகையான பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.





# வாகனப் புகை பரீட்சித்தல் விழிப்புணர்வுச் செயலமர்வு

(அ.அஸ்வர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஏற்பாட்டில் வாகன புகை பரீட்சித்தல் மற்றும் விழிப்புணர் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் (12) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதான மோட்டார் பரிசோதகர் ரி. சிவயோகன் தலையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றும் சுற்றாடல் அதிகார சபை, அளவைகள் நிறுவைகள் திணைக்களம், மாவட்ட செயலகம் ஆகியவற்றைச் சேர்ந்தஉததியோகத்தர்கள் கலந்து கொண்டனர். மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் மற்றும் வாயு வெளியிடல் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் 4 நாள்கள் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இதன் போது மோட்டார் வாகன சட்ட விதிகள், வளி மாசுபாடு, மனித சுகாதாரம், சுற்றுச் சூழல் பாதிப்பை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களின் புகை பரிசோதனையின் போது அவதானிக்க வேண்டிய தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக விபரிக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்ட பிரதான மோட்டார் வாகன பரிசோதகர் கே. மதிவண்ணன், தொழில் நுட்பவியலாளர் என்.எம்.எம்.மர்சூக், சூற்றுச்சூழல் உத்தியோகத்தர் எஸ். காயத்ரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கழிவு முகாமைத்துவப் பூங்காவாக வத்தளை குப்பை மேடு அபிவிருத்தி

வத்தளை, கெரவலப்பிட்டி குப்பை மேடு கழிவு முகாமைத்துவப் பூங்காவாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமையக் கழிவு முகாமைத்துவத்தின் ஊடாகத் தூய்மையான சூழலைப் பேணுவதற்காக, இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் இந்தப் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

கழிவுகளைப் பயன்படுத்தி இயற்கை உரம் தயாரிப்பதுடன், எரி எண்ணெய் உற்பத்தி, முதன்மைக் கரி உற்பத்தி மற்றும் பிற புதுமையான பொருள்களை உற்பத்தி செய்யும் இடமாக இந்தப் பூங்கா உருவாக்கப்படவுள்ளது என்று இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கெரவலப்பிட்டி குப்பை மேட்டில் மக்கும் குப்பைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 20 மெற்றிக் தொன் குப்பையில் இயற்கை உரம் உற்பத்தி செய்யப்பட்டு சில்லறை சந்தைக்கு விடப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெரவலபிட்டி குப்பை மேட்டில் உற்பத்தி செய்யப்படும் உரத்தில் பாதரசம் மற்றும் ஈயம் இல்லை என்றும் விவசாயத் தேவைகளுக்கு மிகவும் ஏற்றது என்பதும் ஆய்வக சோதனைகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த குப்பை கிடங்கில் குப்பைகள் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காதவை என வகைப்படுத்தி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

கொழும்பு நகர சபை பிரதான கழிவு வழங்குனராகச் செயற்படும் அதே வேளை வத்தளை, ஜா-எல, தொம்பே, அத்தனகல்ல உள்ளூராட்சி மற்றும் நகர சபைகள் மற்ற கழிவு விநியோகஸ்தர்களாக செயற்படுகின்றன.

இது தவிர பல தனியார் துறை விநியோகஸ்தர்களும் கெரவலப்பிட்டி குப்பை மேட்டில் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி நாளொன்றுக்கு 550 மெற்றிக் தொன் மக்கக் கூடிய கழிவுகளும், 250 மெற்றிக் தொன் மக்காத குப்பைகளும் கெரவலப்பிட்டி குப்பை மேட்டில் பெறப்படுகின்றன.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்த பின்னர், கெரவலப்பிட்டி குப்பை மேடு திட்டம் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் 2017 ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கெரவலப்பிட்டி பிரதேசத்தில் 400 ஏக்கர் காணியில் இந்தக் குப்பை மேடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கெரவலப்பிட்டிய குப்பைத் மேட்டில் இதுவரை பராமரிக்கப்பட்டுவரும் உரத் திறனை அதிகரிப்பதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# வாழ்வாதார உதவி வழங்கல்

(எம். எப். நவாஸ் )

சமுர்த்தி வீட்டு லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிக்கு, வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கடை தொகுதிக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் நஹீஜா முசாபிர் இவற்றை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ எம். ஹமித், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எஸ். எம். உனைஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.








# அட்டாளைச்சேனை ஒருங்கிணைப்புக் கூட்டம்

(நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம். அதாவுல்லாஹ் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (13) இடம்பெற்றது.

இதில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச் எம் எம். ஹரிஷ், பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமட் சாபிர், உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், பிரதேச சபை செயலாளர் எஸ் ஏ. பாயிஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எல்.மஜீத், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் ஜேஎம்.வாஸிர் , நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எஸ்.ஏ. பாயிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் முஸ்ஸரப்பின் இணைப்பாளர் எஸ். எம். எம். அறூஸ், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி எம். இஸ்மாயில், அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிப்பாளர் அஷ்ஷேக் எம். ரஹ்மத்துல்லாஹ், அட்டாளைச்சேனைக் கோட்டக்கல்வி அதிகாரி எம் எச். ரஷ்மி, அக்கரைப்பற்று பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய திணைக்கள தலைவர்கள், அட்டாளைச்சேனை, திராய்க்கேணி, ஒலுவில், பாலமுனை, ஆலம்குள கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# மாணவிகளுக்குக் கௌரவம்

(வடிவேல் டினேஸ்)

திருக்கோவில் வலயக் கல்வி பணிமனைக்கு உட்பட்ட மாணவிகள் இருவர் தமது பாடசாலை வரலாற்றில் 3 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

பொத்துவில் கோட்டத்தின் தமிழ் பிரிவுக்கு உட்பட்ட பொத்துவில் மெதடிஸ்த தமிழ் மஹாவித்தியாலய மாணவி சாந்தலிங்கம் ரியோன்சியா 3 ஏ சித்தி பெற்று 1.9 இசட் புள்ளிகளுடன் மாவட்ட மட்டத்தில் 25 நிலையை அடைந்து தமது பகுதியில் முதல் மாணவியாக சட்டபீடத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

கோமாரி மெதடிஸ்த மத்திய தமிழ் மகா வித்தியாலய மாணவி குமாரலிங்கம் கோசாளினி 1.8 இசட் புள்ளிகளுடன் மாவட்ட மட்டத்தில் 65 இடத்தை அடைந்து கலை பிரிவில் தெரிவாயுள்ளார்.

இந்த இரு மாணவிகளும் தமது பகுதிகளில் முதல் 3 ஏ சித்தி பெற்று தமது கல்வி வலயத்துக்கும் கோட்டத்துக்கும் பெருமை சேர்ந்துள்ளனர்.

இவர்களைப் பாராட்டும் முகமாக நேற்று புதன்கிழமை (13) திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார், பொத்துவில் கோட்டக்கல்வி (தமிழ் பிரிவு) அதிகாரி ரி.உதயகுமார் ஆகியோர் மாணவிகளின் இல்லங்களுக்குச் சென்று பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.





# தலைமைத்துவ பயிற்சிப் பாசறை

(பௌசுல் றிபாஸ்)

நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலுனர்க்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சிப் பாசறை நேற்று புதன் கிழமை (13) நடைபெற்றது.

பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி எஸ்.ஏ.நாசரின் ஏற்பாட்டில் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் எம்.எம்.மஹ்சூம் தலைமையில் நடைபெற்ற இந்தத் தலைமைத்துவ ஒரு நாள் பயிற்சி பாசறையில் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ.ஜாபிர், அம்பாறை மாவட்ட செயலக உளவளத்துறை அதிகாரி மனூஸ் அபூபக்கர் , வாழைச்சேனை தேசிய இளைஞர் படையணியின் நிலையப் பொறுப்பதிகாரி மேஜர் கே.தமீம் ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

# குழந்தை வளர்ச்சி விழிப்புணர்வு

(அ.அஸ்வர்)

குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு என்னும் தொனிப்பொருளில் அரச உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு செவ்வாய்க் கிழமை (12) அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட செயலர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிபுணத்துவ உளவியலாளர் கலாநிதி சமிந்த வீரசிறிவர்தன பிரதான வளவாளராக கலந்துகொண்டார்.

உளவியல் அணுகு முறைகளின் கீழ் பல்வேறு விடயதானங்கள் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது அம்பாறை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.ஆர். ஹசந்தி, அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர், அம்பாறை மாவட்ட சிறுவர் காப்புறுதி உத்தியோகத்தர், அம்பாறை மாவட்ட மகளிர் பொலிஸ் உத்தியோகத்தர்கள், அம்பாறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









# சாய்ந்தமருது மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர், நூருல் ஹுதா உமர், நவாஸ்)

சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (13) புதன்கிழமை சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 179 மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டன.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகள் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் நிதியின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் நாடளாவிய ரீதியில் 2 லட்சம் மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தினூடாக பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றன.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் ஆகியோரின் வழிகாட்டலில், சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ. ஜெகதீசன் கலந்து கொண்டார்.



உதவிப் பிரதேச செயலர் எம்.ஐ.முவஃபிகா, கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல். ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# வேம்பு மரம் முறிந்து வீழ்ந்து பாடசாலைக் கட்டடம் சேதம்

(வி.ரி.சகாதேவராஜா)

பாரிய வேப்ப மரம் முறிந்து வீழ்ந்ததில் பாடசாலைக் கட்டடம் சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் சம்மாந்துறை அல்மதீனா வித்தியாலயத்தில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வீசிய கடும் காற்றால் அங்கிருந்த வேம்பு மரம் பாடசாலை வகுப்பறைக் கட்டடத்தின் மீது விழுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பாடசாலை அதிபர் ஜனாபா.எம். டி. சரீனா தெரிவித்தார். இன்று வியாழக்கிழமை காலை அந்தப் பாடசாலையின் இணைப்பாளர் ஏ. சிராஜ்தீன் அங்கு சென்று பார்வையிட்டார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானாவுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.



இணைப்பாளர் சிராஜ்தீன் உடனடியாக சம்பந்தப்பட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும், பெலிஸாருக்கும், பிரதேச செயலாளருக்கும் அறிவித்தார். அதன் பின்னர் அந்த மரங்கள் அகற்றப்பட்டன.

சுமார் 100 பிள்ளைகள் இருந்து கற்கும் வகுப்பறைகள் இந்த அனர்த்தத்தில் சேதமாகியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கல்முனை காரைதீவு சம்மாந்துறை கரையோரப் பகுதிகளில் பாரிய இடி மின்னல் முழக்கத்துடன் கடுங் காற்று வீசியது. தொடர்ந்து கனமழை பொழிந்தது. அத்தருணத்தில் மின்சாரம் தடைப்பட்டது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு வறட்சிக்கு மத்தியில் இந்த மழை பெய்துள்ளது.





# வரலாற்று திரைப்படமும் கண்காட்சியும்

(எம் எப் . நவாஸ்)

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வரலாற்று திரைப்படமும் கண்காட்சியும் நேற்று (13) இடம்பெற்றன.

ஐரோப்பிய ஒன்றிய நிதிப் பங்களிப்புடன் ஜேர்மன் சர்வதேச ஆய்வு மன்ற நிறுவனத்துடன் இலங்கை நீதி அமைச்சும் இணைந்து இதனை நடத்தின.

73 ஆண்டுகளுக்கு முன்னும் பின்னும் உள்ள வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட திரைப்படமும் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்து முகமான கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மூன்று நாள்களாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு நேற்று (13) ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இதனைப் பார்வையிடுவதற்கு இளைஞர், யுவதிகள், முதியோர் மற்றும் துறை சார்ந்த அரச உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# பல்கலைக்கழகங்களில் விண்ணப்பங்கள் கோரல்

**(அ.அஸ்வர்)**

அண்மையில் வெளியான உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் அரச பல்கலைக்கழகங்களின் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மற்றும் இலக்கை நோக்கிய திடமான பயணம் என்பவற்றுக்கான வழிகாட்டல் கருத்தரங்கொன்றும் நிகழ்நிலை (முடைநெறி) ஊடாக விண்ணப்பம் சமர்ப்பித்தல் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வும் சம்மாந்துறையில் இடம் பெறவுள்ளது.

சம்மாந்துறை நலனுக்கும் அபிவிருத்திக்குமான பேரவை மற்றும் சம்மாந்துறை இளமானிப் பட்டதாரிகள் அமைப்பு என்பவற்றின் ஏற்பாட்டில் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 8:30 மணிக்கு சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலய மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இம்முறை பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்துள்ள மாணவர்கள் மற்றும் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்த மாணவர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெறலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# மாணவரது சிகை அமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மாணவர்களின் சிகை அமைப்பில் பாடசாலை ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்ட வகையில் நேர்த்தியான அமைப்பைக் கொண்டுவரும் நோக்குடன் பாடசாலை அதிபர்களுக்கும் சிகை அலங்கார நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு பிரதேச செயலாளர் ஏ.எம்.லத்தீப் தலைமையில் சிறுவர் பெண்கள் பிரிவின் ஒருங்கமைப்பின் கீழ் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் ரீ.ஜௌசான், திட்டமிடல் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி, கோட்டக் கல்வி அதிகாரி, பொலிஸ் அதிகாரி, பாடசாலை அதிபர்கள், பள்ளி வாசல் தலைவர்கள், சிறுவர் பெண்கள் பிரிவை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிகை அலங்கார நிலையங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தூங்காத நகரமாக மினுவாங்கொடை

## வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

மினுவாங்கொடை நகரத்தை வர்த்தக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தூங்காத நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மினுவாங்கொட நகரத்தை நவீன உலகுக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

பத்தரமுல்லை, செத்சிரிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் இன்று (14) மினுவாங்கொடை நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

நூறு நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மினுவாங்கொடை நகரம் ஏற்கனவே அழகுபடுத்தப்பட்டது.

மினுவாங்கொடை நகர அபிவிருத்தித் திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பட்டயப் பொறியியலாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களால் தயாரிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தியின் போது நகரில் உள்ள வயல் நிலங்கள் உள்ளிட்ட இயற்கை சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.



கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் உள்ளதால் இந்த நகரத்தின் வர்த்தக மதிப்பு மிகவும் அதிகமாக உள்ளது.

எனவே, நகரத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, வர்த்தகப் பெறுமதியை அதிகரிக்கும் வகையில், கலப்பு அபிவிருத்தித் திட்டமாக மினுவாங்கொடை நகர அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கப்பட வேண்டும்.

மினுவாங்கொடையை தவிர்த்து மிக இலகுவாக விமான நிலையத்தை அடையும் வகையில் மினுவாங்கொடைக்கு அருகில் உள்ள அம்பக ஹவத்த பகுதியிலிருந்து விமான நிலையம் வரை புதிய வீதியொன்று அமைக்கப்பட வேண்டும்.

அங்கு மினுவாங்கொடை நகரின் அபிவிருத்திக்காக ஒன்பது ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட வேண்டும்.

அதன்படி, தனியார் மருத்துவமனைகள், வாகன நிறுத்துமிடங்கள், புதிய வணிக வளாகங்கள், அரங்கங்கள், பொழுது போக்கு பூங்காக்கள் போன்றவற்றைக் கொண்டு நகரை மேம்படுத்த வேண்டும் .

மினுவாங்கொடை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்கு உட்பட்டு, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு காணியை சுவீகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேல் மாகாண ஆளுநர், விமானப் படையின் மார்ஷல் ரொஷான் குணதிலக்கவிடம் தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நகரின் வளர்ச்சியில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க நீதித்துறை நடவடிக்கை விரைந்து எடுக்கும்.

மினுவாங்கொடை நகர சபையின் தற்போதைய நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி நகர அபிவிருத்திக்கான அடிப்படைத் திட்டங்களை ஆரம்பிக்குமாறு இதன்போது ஆலோசனை வழங்கினார்.

இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானாராச்சி, பிரதி பணிப்பாளர் நாயகம் லலித் விஜேரத்ன, மினுவாங்கொடை நகர சபையின் முன்னாள் தலைவர் நீல் ஜயசேகர மற்றும் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





# நினைவு தின நிகழ்வுகள்

(றிபாஸ் சப்னா)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் ஸ்தாபகர் எம்.ஏ.பாக்கீர் மாக்கார் மற்றும் டாக்டர் பரீட் மீராலெவ்வை ஆகியோரின் நினைவு தின நிகழ்வு ஒலுவில் கீரீன் வில்லா விடுதியில் இடம்பெற்றது.

முன்னணியின் மாவட்டத் தலைவர் ஏ.மாபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் தேசிய பணிப்பாளரும், மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.ஐ.உதுமாலெவ்வை, ஏறாவூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எல்.ஏ.லெத்தீப் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். அமைப்பின் செய லாளர், பொரு ளாளர் உட்பட மாவட்ட பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பாக்கீர் மாக்கார், மற்றும் பரீட் மீராலெவ்வை ஞாபகார்த்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இருவருக்குமான தூவா பிராத்தனையும் யூ.எல்.நியாஸ் மௌலவியால் நடத்தப்பட்டது.

# இந்தியாவின் உதவியை நிராகரித்தார் கனடா பிரதமர்!



இந்தியாவில் கடந்தவாரம் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாடு கனடா விடயத்தில் எதிர்பாராத விதமாக, எதிர் விளைவுகளே உருவாகியுள்ளது.

இந்தியா வந்த கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, உச்சி மாநாட்டுக்குப் பின் மீண்டும் கனடா புறப்பட இருந்த நிலையில், அவர் நாடு திரும்ப இருந்த விமானத்தில் எதிர்பாராத விதமாக தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

அதனால் 36 மணி நேரமாக அவர் டில்லியிலேயே தங்கியிருக்கும் நிலை உருவாகியுள்ளது.

ஆனால், இந்திய அரசு அவருக்கு உதவ முன்வந்துள்ளது. இந்திய ஜனாதிபதி, பிரதமர் முதலானோர் பயணிக்கும் விமானத்தில் அவர் உடனடியாக கனடா புறப்படலாம் என அவருக்கு இந்திய தரப்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆறு மணி நேரம் கழித்து இந்திய அதிகாரிகளுக்கு பதிலளித்த கனேடிய அதிகாரிகள், இந்தியாவின் உதவியை நிராகரித்துள்ளனர். தங்கள் விமானம் வந்தபிறகே, ட்ரூடோ கனடா புறப்படுவார் என தெரிவித்துள்ளார்கள்.

ஏற்கனவே, இந்தியப் பிரதமர் மோடி, ட்ரூடோவிடம் இந்திய தூதரக அதிகாரிகள் பாதுகாப்பு தொடர்பில் கேள்வி எழுப்பியமை, மற்றும் ட்ரூடோ இந்தியாவில் புறக்கணிக்கப்பட்டார் என்று ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் ஆகியவற்றால் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தியாவின் உதவியை கனடா ஏற்க மறுத்ததுடன், பதிலளிக்கவும் தாமதம் செய்த விடயம், அந்த பிரச்சினையை மேலும் அதிகரிக்கச் செய்வதுபோல் அமைந்துள்ளது.

## வேற்றுகிரகவாசிகளின் உடல்களை காட்சிப்படுத்தியது மெக்சிகோ!



மெக்சிக்கோ நாட்டில் ஒரு அரச நிகழ்வின்போது 'ஏலியன்' என்று கூறப்படும் வேற்றுகிரகவாசிகளின் உடல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கண்ணாடிப் பெட்டிகளில் காட்சிப் படுத்தப்பட்ட புதைபடிவ உடல்கள் பெரு நாட்டின் குஸ்கோவில் இருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவை ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேற்று கிரகவாசிகளின் உடல்கள் இதுபோன்ற வடிவத்தில் காட்சிப்படுத்துவது இதுவே முதல் முறையாகும்.

மேலும் மனித உலகில் உள்ள வேறு எந்த உயிரினங்களுடனும் இந்த உடல்கள் தொடர்பு இல்லை என மெக்சிக்கோ நாட்டின் மூத்த ஊடகவியளாலர் ஒருவரான ஜெய்ம் மௌசன் தெரிவித்துள்ளார்.

## லிபியாவில் வெள்ளம்: 20 ஆயிரம் பேர் பலி!



லிபியாவில் ஏற்பட்ட வெள்ள பெருக்கில் உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தை கடந்துள்ளது.

லிபியாவின் தரைக்கடல் நகரத்தில் மாத்திரம் மூவாயிரத்து 840 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 400 பேர் சூடான் மற்றும் எகிப்தை சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இதுவரை ஆயிரக்கணக்கானோர் லிபியாவிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியம் லிபியாவிற்கு 5 இலட்சம் ஐரோப்பிய யூரோக்களை நிதியுதவியாக வழங்கியுள்ளது. இத்தாலி லிபியாவிற்கு பாதுகாப்பு படையினர் மற்றும் மீட்பு படையினரை தாங்கிய மூன்று கப்பல்களை அனுப்பியுள்ளது.

# எதிரணியான ‘இந்தியா’ கூட்டணியின் ஒரே இலக்கு சனாதனத்தை ஒழிப்பதே!

## சீறுகின்றார் பிரதமர் நரேந்திர மோடி

சனாதனத்தை ஒழிப்பதே எதிர்க் கட்சிகளின் ‘இந்தியா’ கூட்டணியின் நோக்கம் எனப் பிரதமர் மோடி காட்டமாகச் சாடிப் பேசினார்.

மத்தியப் பிரதேச மாநிலம் பினாவில் நடைபெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் பிரதமர் மோடி பேசுகையில் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஜி20 மாநாட்டை இந்தியா எப்படி வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தது என்பதை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். இது நமது நாட்டின் கூட்டுச் சக்திக்கு சான்றாகும். ஜி20 பிரதிநிதிகள் நம் நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரியத்தால் ஈர்க்கப்பட்டனர். ஜி20 மாநாட்டின் வெற்றிக்கான பெருமை நாட்டு மக்களுக்குச் சேரும். இது 140



கோடி மக்களின் வெற்றி.

‘இந்தியா’ கூட்டணியினர் சுவாமி விவேகானந்தர் மற்றும் லோகமான்ய திலகர் ஆகியோருக்கு உத்வேகம் அளித்த ‘சனாதன தர்மத்தை’ அழிக்க விரும்புகிறார்கள். இன்று அவர்கள் வெளிப்படையாகவே சனாதனத்தை குறிவைக்க ஆரம்பித்து விட்டார்கள். நாளை நம் மீதான தாக்குதல்களை அதிகப்படுத்துவார்கள்.

நாடு முழுவதும் உள்ள அனைத்து ‘சனாதனிகளும்’, நம் நாட்டை நேசிக்கும் மக்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

‘இந்தியா’கூட்டணிக்கு ஒரு தலைவர் இல்லை. எதிர்க்கட்சிகளில் உள்ளவர்கள் தலைக்கனம் கொண்டவர்கள். இந்திய கலாச்சாரத்தை தாக்க மறைமுக செயல்திட்டத்துடன் ‘இந்தியா’ கூட்டணி வந்துள்ளது.

சனாதனம் மீதான தாக்குதல் இந்திய கலாச்சாரம் மீதான தாக்குதலாகும். யார் எவ்வளவு தாக்கினாலும் சனாதனம் உயர்ந்துகொண்டே செல்லும். - இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத தாக்குதல்: பாதுகாப்புப் படையினர் மூவர் உயிரிழப்பு!

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் இடம்பெற்ற மோதலில் இந்திய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

அனந்தநாக் மாவட்டத்தின் கேகர்நாக் அருகே காடோல் வனப் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்புப் படையினர் நேற்று அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது, வனப்பகுதியில் பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி உள்ளனர். இதன்போது பாதுகாப்புப் படையைச் சேர்ந்த மூன்று பேர் காயமடைந்தனர்.



இதனையடுத்து, அவர்கள் மூவரும் ஸ்ரீநகர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களைப் பரிசோதித்த மருத்துவர்கள் மூவரும் உயிரிழந்துவிட்டனர் என தெரிவித்துள்ளனர்.

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த மன்பிரீத் சிங், ஆஷிஷ் தோன்சாக், ஜம்மு காஷ்மீர் டிஎஸ்பி ஹிமாயூன் முசாமில் பட் ஆகிய அதிகாரிகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

# எதிர்கட்சிகளின் பொதுக்கூட்டம் அடுத்த மாதம்!




‘இன்டியா’ கூட்டணியின் பொதுக்கூட்டத்தை அடுத்த மாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்தியப் பிரதேச சட்டமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்கும் வகையில் இந்த பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதுடில்லியில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் இல்லத்தில் 14 உறுப்பினர்கள் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முதல் கூட்டம் நேற்று ஆரம்பமானது. மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் கட்சிகளுக்கு இடையேயான தொகுதி பங்கீடு குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.